1975 ஏப்ரல் 5] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]

அடுத்து, பேரவை விதி 41-ன் கீழ் அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கே. என். குமாரசாமி அவர்களும் திரு. மருதாசலம் அவர்களும் கொண்டு வருவார்கள்.

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

திருச்சி தலைமை மருத்துவ மனையில் அறுவை அரங்கு மூடப் பட்டதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து—தொடர்ச்சி.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I want some more clarification about the Tiruchirappalli Operation Theatre. தலைவர் அவர்களே, திருச்சி அரசினர் மருத்துவமனையில் இருக்கிற அறுவை சிகிச்சை அரங்கு அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதற்கே ஒரு அச்ச உணர்வு ஏற்படுகிறது. எனவே, அந்த அச்ச உணர்வைப் போக்குவதற்கு அரசு தனி முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, டெட் டனஸ் என்பது அறுவை சிகிச்சை அரங்கில் கொண்டுபோய் அறுவை சிகிச்சை நடத்தப்பட்டவர் ஒருவருக்கு ஏற்பட்டது. டெட்டனஸ் என்ற சூழல் ஏற்படுமானல், அந்த அபெக்டேஷன் ஏற்படுமானல் அது அந்த நேரத்தில் மூன்று நான்கு பேர்களைப் பாதித்து விடுகிறது. இந்த முறை நல்லவேளையாக ஒருவருக்கு ஏற்பட்டதே தவிர வேறு யாருக்கும் ஏற்படவில்லை என்று தெரி விக்கப்பட்டிருக்கிறது. அந்த அரங்கு மூடப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் டெட்டனஸ் ஏற்பட்ட பின்னல் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து பின்னல் அந்த அறை திறந்திருந்தால் ஒரு மாதம் கழித்து யாருக்கும் வந்துவிடும், வந்து விடலாம். ஆகவே டெட்டனஸ் முழுவதையும் ஒழிப்பதற்கு 100 சதவிகிதமும் ஒழிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை.

அந்தத் துறையைச் சேர்ந்தவர்களை நன்றாக என்னென்ன பரி சீலனை செய்யமுடியுமோ அவற்றைச் செய்யும்படி கேட்டிருக் கிறேன். ஒருவேளை திருச்சியில் வருகிறது, தஞ்சையில் வருகிறது என்றல் அந்த வட்டாரத்தில் கொஞ்சம் புழுதி அதிகம். அரசியல்

புழுதியோ எந்தப் புழுதியோ, திருச்சியிலும் தஞ்சையிலும் இருக்கிறது. புழுதிக் காற்று அடிக்கும் இடத்தில் பொதுவாக இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கலாம். அந்தப் புழுதியின் விளைவுகளைத் தடுப்பதற்கு என்னென்ன பாதுகாப்பு முறைகளைக் கையாள முடியுமோ அவைகளைக் கையாள்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியனுக்கு கேள்வி கேட்க அனுமதி அளித்த தலைவர் அவர்கள் எனக்கும் மின்சாரம் சம்பந்தமாக ஒரு விளக்கம் கேட்க அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பரஸ்ட் சப்ஜக்ட்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பர்ஸ்ட் சப்ஜக்ட் முடிந்து பர்ஸ்ட் சப்ஜக்ட்டுக்கு மறுபடியும் ரிவர்ட் செய்வது சரியல்ல. தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இது ஒரு முக்கியமான விஷயம். சிறிது லீனியன்ஸ் காட்டுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஷார்ட் நோட்டீஸ் குவஸ்ச்சன் ஒன்று கொடுத்தால் நாளைக்கே அமைச்சர் அவர்களை விடையளிக்கச் சொல்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

(அ) பல்லடம் தாலுக்கா கூட்டுறவுத்துறை கடைகளில் நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்காததால் ஆலைத் தொழிலாளர் பட்டினி கிடக்க வேண்டிய நிலை குறித்து.

திரு கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காததால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. என். மருதாசலம் : பல்லடம் தாலுக்காவில் கூட்டுறவுத் துறை கடைகளில் உணவுப் பொருட்கள் நியாய விலையில் கிடைக்காததால் மில்லில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பட்டினி

கிடக்க நேரிடும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்காவில் பொதுவாக நூற்பு ஆலை களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாய விலையில் அரிசி யும், கோதுமையும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, அங்கு தொழிலாளர்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்ற நிலை இல்லை. பொதுவாக தொழிலாளர்களுக்கு குடும்பக் கார்டுகள் கொடுக்கப் பட்டு வாரம் இரண்டு கிலோ அரிசியும், இரண்டு கிலோ கோதுமை யும் கார்டுக்கு வழங்க அமைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்கள் கூட்டுறவு ஸ்டோர்களில் அவர்களுக்கு மீண்டும் இரண்டு கிலோ அரிசி போட அமைப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று சொன் னார்கள். ஆனால் இன்னும் அங்கிருக்கிற நிலை சீர்படவில்லையென்ற தகவல் வந்திருக்கிறது. அந்தக் கார்டுகள் மில் கூட்டுறவு ஸ்டோரில் பதிவு செய்தால்தான் அரிசி கிடைக்கும். அந்த கார்டு களைக் கொண்டுபோய் ஊரிலுள்ள கூட்டுறவுக் கடைகளுக்குப் போய் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று மில் ஸ்டோர் நிர்வாகிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை அவசியம் அமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்த்து அந்த கூட்டுறவு ஸ்டோர்களிலேயே அவர்களுக்கு அரிசி விநியோகிக்கின்ற அளவிற்குச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இரண்டு கிலோ அளவில் என்பது 15 நாளைக்குக் கூட வருவது கிடையாது. ஆகவே, அதை சிறிது கூடுதலாக்கி ஒரு வாரத்திற்கு ஐந்து கிலோ அரிசியாவது கிடைக்க உத்தரவு போடுமாறு கேட்டுக்கொள் கிறேன். அவர்கள் வேறு பக்கத்தில் எதுவும் வாங்கமுடியாது. மில் ஸ்டோரில்தான் கடன் பெற வேண்டியிருக்கிறது. எனவே, அங்கேயே கூடுதல் அரிசி வழங்கும் சூழ்நிலையை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆலைகளில் தொழிலாளர்கள் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் அரிசி, கோதுமை வழங்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஆலையில் வழங்கப்படவில்லை அல்லது யாராவது